18.06.2025 வா.சா.2 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை (ஒ.எஸ்.எண்.119/2019 ) திரு.அய்யாச்சாமி.

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை-

1) பிராதில் விவரிக்கப்பட்டுள்ள 1வது தபசில்சொத்து 2வது தபசில் சொத்து என்று சொல்லப்பட்டுள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியும்.அதன் சர்வே எண் தெரயுமா என்றால் தெரியும்.1ம்தபசில் சொத்தின் சர்வே எண்.805,2வது தபசில் சொத்தின் சாவே எண்.808 ஆகும். அதற்குரிய பழைய சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. எந்த ஆண்டு பழைய சர்வே எண்ணிலிருந்து புதிய சர்வே எண்ணிற்கு மாற்றம் செய்யப்பட்டது என்றால 1996 ஆம் ஆண்டு நத்தம் பட்டா. சர்வே எண்.513/2 ஏ 1 ஏ 1 என்பது எந்த சொத்திற்குரியது என்றால் 2ம்தபசில் சொத்திற்குரியது. மொத்தம் எத்தனை செண்டு இருக்கும் என்றால் 7 செண்டு இருக்கும். 7 செண்டும் வாதிக்குரியதா என்றால் ஆமாம். 1984 ஆம்வருடம் தானசெட்டில்மெண்ட் பத்திரம் 2ம்தபசில் சொத்திற்குரியதா என்றால் ஆமாம். அதை பார்த்துள்ளேனா என்றால் ஆமாம். வா.சா.ஆ.2 செட்டில்மெண்ட் ஆவணத்தில் மால் விவரத்தில் என்ன போடப்பட்டுள்ளது என்று சாட்சியிடம் ஆவணத்தை காண்பித்து கேட்ட போது மங்களசாமி வீட்டிற்கும் வடக்கு,தென்வடல் தெருவிற்கும் மேற்கு, சிலோன் அகதிகள் காலனிக்கு ஒதுக்கப்பட்ட புறம்போக்கு நிலத்திற்கு கிழக்கு, புறம்போக்கு நிலத்திற்கு தெற்கு என்று காண்பிக்கப்பட்டுள்ள மால் 2ம்தபசில் சொத்திற்குரியதா என்றால் வா.சா.ஆ.2 ஆவணம் பதிவு செய்யும் போது 2ம்தபசில் சொத்திற்கு அந்த மால்கள் தான் கண்டியிருந்தது. தற்போது மாறியுள்ளது. சிலோன் அகதிகள் காலனி புறம்போக்கு நிலத்திற்கு கீழ்பக்கம் தாவா 2ம்தபசில் சொத்து இருந்து வரவேண்டுமென்றால் அவ்வாறுதான் உள்ளது இடையில் வீடுகள் உள்ளது. நான் சொல்லும் வீடு சிலோன் அகதிகள் காலனி வீடுகள் என்றால் சரிதான். 2ம்தபசில் சொத்தின் அளவுகள் கிழமேல் 25 அடி தென்வடல் 51 அடி செண்டு 3 என்று குறிப்பிடப்பட்டுள்ளது சரியா என்றால் சரிதான். வா.சா.ஆ.2, 1வது தபசில் சொத்திற்குரியதா என்றால் இல்லை 2ம்தபசில் சொத்திற்குரியது. பிராதில் 2ம்தபசில் சொத்தின் அளவு 7 செண்டு என்று சொல்லுவது தவறு என்றால் தற்போது உள்ள பட்டா அளவின்படி சரிதான்.1ம்தபசில் சொத்திற்கு தான் நத்தம் பட்டா கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2ம்தபசில் சொதத்ற்கு நத்தம்பட்டா வழங்கப்படவில்லை. 2ம்தபசில் இடம் புறம்போக்கு இடம் என்று தெரியுமா என்றால் காலியிடமாக உள்ளது. அது யார் பெயரில் இருந்து வருகிறது என்றால் தெரியாது.

2) சிலோன் காலனி என்பது எனது வீட்டிற்கு மேற்கு பக்கம் உள்ளது என்றால் தற்போது எனது வீட்டிற்கு மேல்பக்கம் உள்ளது. 2ம்தபசில் சொத்திற்கு மேற்கே கோவில்பிள்ளை வீடு அதற்கு அடுத்து எனது வீடு அமைந்துள்ளது. வழக்கில் 2ம்தபசில் சொத்திற்கு என்ன மால் போடப்பட்டுள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியும். அதனை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். பிராதில் 2ம்தபசில் சொத்திற்கு மேற்கே கோவில்பிள்ளை வீடு மற்றும் பால்ராஜ் வீடு என்று உள்ளது எனது வீடு போடவில்லை என்றால் சரிதான். எனது வீடு மேற்கு பக்கம் எனது வீடு உள்ளதாக பிராதில் போடவில்லை என்றால் சரிதான். தெற்கே 1வது தபசில் சொத்திற்கு நான்கு மால்கள் விவரம் தெரியுமா என்றால் தெரியும். கிழக்கே என்ன உள்ளது என்றால் தென்வடல் ரோடு, அதன் பக்கத்தில் எனது வீடு உள்ளதா என்றால் 1வது தபசிலிருந்து வடக்கு பக்கம் என் வீடு உள்ளது. தெற்கே யாருடைய வீடு உள்ளது என்றால் பேச்சிமுத்து வீடு உள்ளது. பிராதில் 1,2 தபசில் சொத்திற்கு சொல்லப்பட்டுள்ள மால்கள் அனைத்தும் தவறானது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணம் 2ம்தபசில் சொத்திற்குரியது அல்ல நான் பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. பிராதில் தபசில் சொத்திற்குரிய மால்கள் தவறாக போடப்பட்டுள்ளதால் அதற்கேற்றார் போல் தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2ம்தபசில் சொத்து வாதியின் பாட்டி பேச்சியம்மாள் அனுபவம் செய்து வந்து அதன் பின்னர் 1984ஆம் ஆண்டு அவரின் அப்பா ஊர்காலன் என்பவர் அனுபவம் செய்து வந்து எழுதிக்கொடுத்தாக சொல்லுவது உண்மையல்ல என்றால் சரியல்ல. நான் வாதியின் உடன்பிறந்தவர் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u> - இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
18.06.2025.